நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**STC. No. 1379 /2025**

**P.W.3 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வேந்திரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | வைத்தியலிங்கம் |
| கிராமம் | : | மல்லிகுந்தம் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW3 |
| வயது | : | 33 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 27–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.00 PM

1. நான் தற்போது தாரமங்கலம் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 2024 ம் வருடம் ஓமலூர் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். 22.04.2024 ம் தேதி மாலை 04.00 மணியளவில் நான் நங்கவள்ளி காவல் நிலையத்தில் இருந்தபோது நங்கவள்ளி

காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மாரியப்பன் அவர்கள் பத்திரகாளியம்மன் கோவில் அருகில் கஞ்சா விற்பதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் என்னை அழைத்ததின் பேரில் நான் அவருடன் சென்றேன்.

2. எங்களுடன் முதல் நிலை காவலர் 173 கலையரசன் என்பவரும் வந்தார். நாங்கள் நங்கவள்ளி பத்திரகாளியம்மன் கோவில் அருகே சென்று காத்திருந்தோம். அங்கு வந்த இரகசிய தகவலாளி அங்கிருந்த 27 வயதுள்ள ஒரு நபரை அடையாளம் காட்டினார். நாங்கள் அவரை பிடிக்க சென்றபோது தப்பிக்க முயற்சி செய்தார். அவரை நாங்கள் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தோம்.
3. முதலில் அவர் தன்னுடை பெயர் மற்றும் முகவரியை மாற்றி சொன்னார். பின்னர் தன்னுடைய பெயர் வைத்தீஸ்வரன், த.பெ. சண்முகசுந்திரம் பத்திரகாளியம்மன் கோவில் அருகில் குடியிருப்பதாக சொன்னார். நாங்கள் அவரிடம் நங்கவள்ளி காவல் நிலையத்திலிருந்து வந்திருப்பதாகவும், காவல் துறை சேர்ந்தவர் என்றும் கூறினோம்.
4. நீங்கள் கஞ்சா வைத்திருப்பதாக நம்பகமான தகவல் உள்ளதென்றும், உங்களை நாங்கள் பரிசோதனை செய்யவேண்டும் என்று சொன்னோம், அதற்கு அவர் நீங்களே பரிசோதனை செய்யுங்கள் என்று ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். எதிரிகொடுத்த சோதனை உரிமம் மற்றும் சம்மதம் தெரிவித்தல் கடிதத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். ( **இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**
5. எதிரியை எங்கள் இருவர் முன்னிலையில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மாரியப்பன் சோதனை செய்தபோது அவரிடம் இருந்து வெள்ளை நிற பாலித்தீன் பையில் விதை, பூ மற்றும் கஞ்சா இலை இருந்தது. அவற்றை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மாரியப்பன் சம்பவயிடத்திலேயே கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து என்னிடமும், 173 கலையரசன் என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார். கைப்பற்றுதல் மகசரிலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான்.( **இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**
6. அதன்பிறகு எதிரியையும், கஞ்சாவையும் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் ரவிக்குமார் அவரிடம் ஒப்படைத்தோம். அதன்பிறகு உதவி ஆய்வாளர் எங்களை விசாரித்தார். எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல

முடியும், இன்று எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.15 PM

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–03.20PM)

1. நான் சம்பவத்தின்போது ஓமலூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்தேன். அதற்கு முன்னதாக கொளத்தூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்தேன். ஓமலூர் உட்கோட்டத்திற்கு தனியாக துணைகண்காணிப்பாளர் உள்ளார் என்றால் சரிதான். அதேபோல் மேட்டுர் உட்கோட்டத்திற்கும் தனியாக துணைகண்காணிப்பாளர் உள்ளார் என்றால் சரிதான்.
2. சம்பவம் தினத்தன்று ஓமலூர் துணைக்காவல் கண்காணிப்பாளர்தான் எனக்கு பணி ஒதுக்கீடு செய்தார். நங்கவள்ளி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கஞ்சா ரோந்துக்கான பணி எனக்கு ஒதுக்கப்பட்டது. எனக்கு எழுத்துபூர்வமாக பணிஒதுக்கீடு ஆணை வழங்கப்படவில்லை. வாய்மொழியாகத்தான் எனக்கு உத்தரவு கொடுத்தார். வழக்கு ஆவணங்கள் எதையும் நான் தயார் செய்யவில்லை.
3. இரகசிய தகவல் பற்றியும், யார் கொடுத்தார் என்பது பற்றியும் எனக்கு நேரடியாக தெரியாது. நாங்கள் ரோந்துக்கு சென்ற பகுதி ஓரளவிற்கு மக்கள் நடமாட்டம் உள்ளப்பகுதியாகும். சம்பவயிடத்திற்கு அருகில் இருக்கும் பத்திரகாளியம்மன் கோவில் பிரபலமான கோவில் என்றால் சரிதான்.
4. என்னை இந்த வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் விசாரிக்கும்போது சம்பவயிடத்திற்கு 16.00 மணிக்கு நங்கவள்ளி காவல் நிலையத்திலிருந்து ரோந்துப்பணிக்கு கிளம்பி சென்றதாக கூறினேன். காவல் நிலையத்திலிருந்து சம்பவயிடம் சுமார் 1 கிலோமீட்டர் தூரம் இருக்கும். 10 நிமிடத்தில் அந்த இடத்திற்கு சென்றுவிடலாம்.
5. நான் சொன்னவாறு உண்மையில் சம்பவயிடத்திற்கு சென்றிருந்தால் எத்தனை மணிக்கு என்ன வாகனத்தில் நான் சென்றேன் என்று காவல் துறை விசாரணையிலும், நீதிமன்ற விசாரணையிலும் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.
6. பிரௌன் கலர் போல் உள்ள சுமார் 2 கிலோவரை எடை போடும் நகைக்கடையில் இருப்பதுபோல் ஒரு எலக்ட்ரானிக் தராசை எடுத்துச்சென்றோம். காவலர் என்ற

முறையில் பாக்கெட் டைரி பராமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். அந்த டைரியில் அன்றாட பணிகள் குறித்து பதிவுசெய்வது வழக்கம் என்றால் சரிதான். அந்த பாக்கெட் டைரியை நான் விசாரணையின்போது ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. சிறப்பு உதவி ஆய்வாளர் மாரியப்பன் என்பவர்தான் இரகசிய தகவலை பதிவுசெய்ததாக சொன்னார். நான் நேரடியாக பதிவுசெய்ததை பார்க்கவில்லை. சோதனை விருப்பக்கடிதத்தில் தனிநபர்கள் யாரும் சாட்சியாக கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான்.
8. இரகசிய தகவல் எவ்வாறு கிடைக்கபெற்றது என்று எனக்கு தெரியாது. கஞ்சாவை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மாரியப்பன் எடைப்போட்டார். அதுப்பற்றி நீதிமன்ற விசாரணையிலும், காவல் துறை விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.
9. கைப்பற்றப்பட்ட கஞ்சாவில் இருந்து மாதிரி எடுத்த விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. மேற்படி சோதனை விருப்பக்கடிதத்தில் கேள்வியையும், பதிலையும் சிறப்பு உதவி ஆய்வாளர் மாரியப்பன் எதிரியிடம் கேட்டு எழுதி எதிரியிடம் கையொப்பம் மட்டும்தான் வாங்கினார்.
10. சம்பவம் நடைபெற்ற தேதியில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் நான் இருக்கும்போதுதான் தயார் செய்தார்கள். நான் பணிபுரிந்த ஓமலூர் காவல் நிலையத்திற்கு தனியாக காவல் ஆய்வாளர் உள்ளார். அந்த காவல் நிலையத்தில் பணிபுரியும் நபர்களுக்கு காவல் ஆய்வாளர்தான் பணிஒதுக்கீடு செய்வார் என்றால் சரிதான்.
11. கொளத்தூர் காவல் நிலையத்தில் நான் பணிபுரியும்போது சிறப்பு உதவி ஆய்வாளர் மாரியப்பன் என்பவருடன் இருந்த பழக்கத்தில் மேற்படி ஆவணங்களில் கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும், உண்மையில் நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றாலும் சரியல்ல.
12. பொதுவாக போதைப்பொருள் ரோந்தின்போது பயன்படுத்தப்படும் உபகரணங்கள் நிலைய எழுத்தர் அல்லது உதவி ஆய்வாளர் வசம் இருக்கும். ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எனக்கு உண்மையில்

துணைகண்காணிப்பாளர் பணிஒதுக்கவில்லை என்றாலும் அவ்வாறு பணி ஒதுக்கியிருந்தால் அதற்கான உத்தரவை இந்தவழக்கில் தாக்கல் செய்திருப்பார்கள் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–03.50PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## STC. No. 1379 /2025

## P.W.4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கலையரசன் |
| தந்தை / கணவர் பெயர் | : | மனோகரன் |
| கிராமம் | : | ஓலைப்பட்டி |
| வட்டம் | : | ஓமலூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW4 |
| வயது | : | 35 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 27–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.16 PM

1. நான் தற்போது ஓமலூர் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 2024 ம் வருடம் நங்கவள்ளி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். 22.04.2024 ம் தேதி மாலை 04.00 மணியளவில் நான் நங்கவள்ளி காவல் நிலையத்தில் இருந்தபோது நங்கவள்ளி காவல் நிலைய

சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மாரியப்பன் அவர்கள் பத்திரகாளியம்மன் கோவில் அருகில் கஞ்சா விற்பதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் என்னை அழைத்ததின் பேரில் நான் அவருடன் சென்றேன்.

2. எங்களுடன் முதல் நிலை காவலர் 2233 செல்வேந்திரன் என்பவரும் வந்தார். நாங்கள் நங்கவள்ளி பத்திரகாளியம்மன் கோவில் அருகே சென்று காத்திருந்தோம். அங்கு வந்த இரகசிய தகவலாளி அங்கிருந்த 27 வயதுள்ள ஒரு நபரை அடையாளம் காட்டினார். நாங்கள் அவரை பிடிக்க சென்றபோது தப்பிக்க முயற்சி செய்தார். அவரை நாங்கள் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தோம்.
3. முதலில் அவர் தன்னுடை பெயர் மற்றும் முகவரியை மாற்றி சொன்னார். பின்னர் தன்னுடைய பெயர் வைத்தீஸ்வரன், த.பெ. சண்முகசுந்திரம் பத்திரகாளியம்மன் கோவில் அருகில் குடியிருப்பதாக சொன்னார். நாங்கள் அவரிடம் நங்கவள்ளி காவல் நிலையத்திலிருந்து வந்திருப்பதாகவும், காவல் துறை சேர்ந்தவர் என்றும் கூறினோம்.
4. நீங்கள் கஞ்சா வைத்திருப்பதாக நம்பகமான தகவல் உள்ளதென்றும், உங்களை நாங்கள் பரிசோதனை செய்யவேண்டும் என்று சொன்னோம், அதற்கு அவர் நீங்களே பரிசோதனை செய்யுங்கள் என்று ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். எதிரிகொடுத்த சோதனை உரிமம் மற்றும் சம்மதம் தெரிவித்தல் கடிதத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். ( **முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**
5. எதிரியை எங்கள் இருவர் முன்னிலையில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மாரியப்பன் அவர் அணிந்திருந்த பேண்ட் இடதுப்பக்க பாக்கெட்டில் சோதனை செய்தபோது அவரின் இடதுப்பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து வெள்ளை நிற பாலித்தீன் பையில் விதை, பூ மற்றும் கஞ்சா இலை அதனுடன் தண்டு ஆகியவை நொருங்கிய நிலையில் இருந்தது. நாங்கள் சோதனைக்கு சென்றபோது எடைபோடும் கருவி மற்றும் சீல் வைக்கும் கவர், SHO சீல் ஆகியவற்றை எடுத்துச்சென்றோம்.
6. சம்பவயிடத்திலேயே எதிரியை 05.00 மணிக்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மாரியப்பன் கைதுக்கான காரணத்தை தெரிவித்து கைதுசெய்தார். சம்பவயிடத்திலேயே 05.15 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் பொதுமக்கள் யாரும்

இல்லாததால் அங்கிருந்த எங்கள் இருவர் முன்னிலையில் தயார் செய்து என்னிடமும், முதல் நிலை காவலர் 2233 செல்வேந்திரன் என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார். கைப்பற்றுதல் மகசரிலுள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான்.( **முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7. அதன்பிறகு எதிரியையும், கஞ்சாவையும் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் ரவிக்குமார் அவரிடம் ஒப்படைத்தோம். காவல் நிலையம் வந்தபிறகு எதிரி மீது சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மாரியப்பன் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தார். அன்றையதினமே வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் ரவிக்குமார் எங்களை விசாரித்தார். எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும், இன்று எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.25 PM

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை தொடங்கப்பட்ட நேரம்– 03.51 PM

1. இந்த வழக்கு ஆவணங்கள் எதையும் நான் எனது கைப்பட தயார் செய்யவில்லை. இரகசிய தகவல் வந்த விவரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவயிடத்தில் மக்கள் நடமாட்டம் ஓரளவிற்கு இருக்கும், விசேஷ நாட்களில் தான் அதிகமாக இருக்கும். விசேஷ நாட்களில் மட்டும் அந்தகோவில் திறப்பார்கள். அவ்வளவு பிரபலமான கோவில் அல்ல அது.
2. காவல் துறை விசாரணையில் குறிப்பாக எத்தனை மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றோம் என சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. காவல் துறை விசாரணையில் எந்த வாகனத்தில் ரோந்துக்கு சென்றோம் என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அதுப்பற்றி உதவி ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.
3. பிரௌன் கலர் நிறமுள்ள 1 கிலோ வரை எடைபோடும் எலக்ட்ரானிக் தராசை ரோந்துப்பணிக்காக எடுத்துச்சென்றோம். அதை உதவி ஆய்வாளர் தன்வசம் வைத்திருந்தார். நங்கவள்ளி காவல் நிலையத்திற்கு சம்பவத்தின்போது ஒரு உதவி ஆய்வாளர் இருந்தார். சம்பவதன்று நங்கவள்ளி காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் நங்கவள்ளி காவல் நிலையத்திற்கு வந்தாரா என்று எனக்கு

தெரியாது. நான் பார்க்கவில்லை. மேற்படி ஆய்வாளரிடம் நான் உத்தரவு பெறவில்லை. சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ஆய்வாளரின் உத்தரவு பெற்றுத்தான் என்னை அழைத்துச்சென்றார்.

4. காவலர் என்ற முறையில் பாக்கெட் டைரி பராமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். அந்த டைரியில் அன்றாட பணிகள் குறித்து பதிவுசெய்வது வழக்கம் என்றால் சரிதான். அந்த பாக்கெட் டைரியை நான் விசாரணையின்போது ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான்.
5. சம்பவதன்று காவல் நிலையத்தில் பணியில் இருந்தேன் என்பதற்கான ஆவணம் எதையும் நான் விசாரணையின்போது ஒப்படைக்கவில்லை. கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யும்போது அந்த இடத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லை. அதனால் சிறப்பு உதவி ஆய்வாளர் பொது ஜன சாட்சிகளை சாட்சியம் அளிக்க அழைக்கவில்லை.
6. நாங்கள் ரோந்துப்பணிக்கு போகும்போது உதவி ஆய்வாளர் யாரும் அங்கு இல்லை. சிறப்பு உதவி ஆய்வாளர் மட்டும்தான் இருந்தார். சம்பவதன்று நிலைய பொறுப்பு அதிகாரி உதவி ஆய்வாளர் ரவிக்குமார் ஆவார். அன்று பணியில் இருந்தார். ஆனால் அந்த சமயத்தில் காவல் நிலையத்தில் இல்லை.
7. சம்பவத்தின்போது உதவி ஆய்வாளர் மாதேசன் என்பவரும் நங்கவள்ளி காவல் நிலையத்தில் பணியில் இருந்தார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு உதவி ஆய்வாளர் காவல் நிலைய நாட்குறிப்பை ஆரம்பித்து நிலைய பொறுப்பை எடுத்துக்கொள்வார். அன்றைய தினம் உதவி ஆய்வாளர் மாதேசன் நிலைய பொறுப்பை எடுத்துக்கொள்ளவில்லை.
8. இரகசிய தகவலாளி சம்பவயிடத்திற்கு வந்தார். தூரத்திலிருந்து சைகை காட்டினார் நான் பார்த்தேன். மேற்படி விவரங்களை காவல் துறை விசாரணையில் சொல்லியுள்ளேன். சிறப்பு உதவி ஆய்வாளர் ரோந்துக்கு தேவையான பொருட்களை அவரது வாகனத்தில் வைத்து எடுத்துவந்தார்.
9. ரோந்துக்கு தேவையான பொருட்கள் பொதுவாக நிலைய எழுத்தர் பொறுப்பில் இருக்கும். மாதிரி எடுத்த விவரம் குறித்து காவல்துறை விசாரணிலும், நீதிமன்ற விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் சம்பவயிடத்திற்கு அருகில் இருக்கும்போதுதான் பார்வை மகசர் மற்றும் மாதிரி

வரைபடம் தயார் செய்தார்கள்.

10. நான் சாட்சி கையொப்பம் செய்த சோதனை விருப்ப கடிதத்தில் கேள்வியும், பதிலையும் கேள்விக்கேட்ட சிறப்பு உதவி ஆய்வாளர் மாரியப்பன் தான் எழுதினார். ஆனால் எதிரி சொன்னதை வைத்து தான் பதில் எழுதினார். காவல் துறை விசாரணைில் என் முன்னால்தான் மாதிரி எடுத்ததாக நான் சொன்னேன்.
11. மாதிரி எடுக்கும்போது இரண்டு பாக்கெட்டுகள் மாதிரி எடுக்கப்பட்டது. எவ்வளவு இருந்தது என்று அளவு என்னிடம் சொல்லவில்லை. ஆனால் கையொப்பம் இட்டோம். எதிரியிடம் இருந்தது மொத்தம் எத்தனை கிராம் கஞ்சா என்று எனக்கு தெரியாது.
12. நான் உண்மையில் சம்பவயிடத்திற்கு போகவில்லை என்றாலும், நான் சொன்னவாறு சென்றிருந்தால் எதிரியிடம் மொத்தம் எத்தனை கிராம் கஞ்சா இருந்தது, அதில் எத்தனை மாதிரிகள் எடுக்கப்பட்டது, அது எத்தனை பொட்டலங்களாக மடிக்கப்பட்டது என்றும், ஒவ்வொன்றிலும் எவ்வளவு கிராம் கஞ்சா நிரப்பட்டது என்ற விவரங்கள் எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும், அதை நான் குறிப்பிட்டு சாட்சியம் அளித்திருப்பேன் என்றாலும் சரியல்ல.
13. சம்பவதன்று நங்கவள்ளி காவல் நிலையத்தின் உதவி ஆய்வாளர் மாதேசன்தான் என்றாலும், உண்மையில் காவல் நிலையத்தில் நான் பணியில் இல்லாததால்தான் உதவி ஆய்வாளர் ரவிக்குமார் நிலைய பொறுப்பு அதிகாரியாக இருந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.
14. நான் சொன்னவாறு எதிரியிடமிருந்து எந்தவொரு சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளார்கள் என்றாலும், அதில் காவல் நிலையத்தில் வைத்து சாட்சி கையொப்பம் செய்துள்ளோம் என்றாலும், உண்மையில் நாங்கள் சம்பவயிடத்தில் இருந்திருந்தால் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சாட்சி கையொப்பம் செய்திருப்போம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–04.25 PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/−நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## STC. No. 1379 /2025

## P.W.5 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | புகழேந்தி |
| தந்தை / கணவர் பெயர் | : | கிருஷ்ணன் |
| கிராமம் | : | நங்கவள்ளி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW5** |
| வயது | : | 19 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 27–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.26 PM

1. நான் தற்போது நங்கவள்ளியில் குடியிருக்கிறேன். நான் கட்டிட வேலை செய்கிறேன். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எதிரியை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு வேறு ஒரு வழக்கிற்காக நண்பருடன் சென்றபோது போலீசார் என்னிடம் எதுவும் எழுதாத

வெள்ளை தாளில் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது.( **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

1. எதிரி எனது நண்பர் என்றால் சரியல்ல. நங்கவள்ளி பத்ரகாளியம்மன் வீதியும், ஈஸ்வரன் கோவில் வீதியும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். நான் ஈஸ்வரன் கோவில் வீதியிலும்,எதிரி பத்ரகாளியம்மன் கோவில் வீதியிலும் உள்ளார் என்றால் சரிதான். எதிரி கஞ்சா விற்றது பற்றியும் அவரை போலீசார் பிடித்தது பற்றியும் தெரியுமா என்றால் தெரியாது.

2. இந்த வழக்கு விவரங்களை போலீசார் என்னிடமும், என்னுடன் கையெழுத்து செய்த புகழேந்தியிடமும், சொல்லிய பிறகு நாங்கள் இருவரும் சம்மதம் தெரிவித்தன் பேரில் எங்கள் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி அதில் உள்ள விவரங்களை நாங்கள் இருவரும் தெரிந்த கொண்ட பிறகுதான் கையெழுத்து செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரி எனது நண்பர் என்பதால் அவருக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—இல்லை**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம்** 12.28 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்**